பாசிகுளம் கிராமத்துக்கு குடிநீர்த் திட்டம்

*183 வினு—திரு. எஸ். சிவசுப்பிரமணியன் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—(அ) விருத்தாசலம் தாலூக்கா, பாசிகுளம் கிராமப் பொதுமக்களிடமிருந்து குடி தண்ணீர் திட்டம் விஷயமாக ஏதேனும் மனு அரசாங்கத்திற்கு வந்துள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் மீது எடுத்த நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. மா. முத்துச்சாமி : (அ) ஆம்.

(இ) இந்தக் கிராமத்திற்கு நீர் வழங்குவதற்கான திட்டம் ஒன்று அரசின் ஆலோசனையில் இருந்து வருகிறது.

தென்கரிம்பலூர் கூட்டுறவு கடன் வழங்கும் சங்கம்

* 184 வினு—திரு. வி. கே. கோதண்டராமன் : மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

வடஆற்காடு மாவட்டம், செங்கம் தாலூகா, தென் கரிம்பலூர் கூட்டுறவு கடன் வழங்கும் சங்கத்தில் இரண்டு லட்சம் ரூபாய் வரையில் கையாடல் செய்யப்பட்டதற்காக எத்தனை பேர்கள் மீது 1969-ம் ஆண்டில் நடவடிக்கை எடுக்கப்பட்டது ? விவரம் ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனுர் : குறிப்பிட்ட இந்த சங்கத்தில் ரூ. 28,620 கையாடல் செய்திருப்பது கண்டு பிடிக்கப்பட்டது. எனவே, நிர்வாகக் குழு கலைக்கப்பட்டு, சங்கத்தை நடந்துவதற்கு தனி அதிகாரி நியமிக்கப்பட்டார். போலீசிலும் புகார் செய்யப்பட்டது. கையாடல் செய்த தொகை முழுவதும் திரும்பப் பெறப்பட்டது. கூட்டுறவு சங்கச் சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்கப்பட இருக்கிறது.

திரு. வி. கே. கோதண்டராமன் : இதிலே இன்வெஸ்டிகேஷனெல்லாம் செய்து பகீரத முயற்சிக்குப் பிறகு தான் இவர்கள் மீது வழக்கு தொடரப்பட்டு, கைது செய்யப்பட்டார்கள். கைது செய்யப்பட்டு விடுதலை செயப்பட்ட பிறகு வேலூர் கெஸ்டு ஹவுஸில் முதல் மந்திரி அவர்களோடு விருந்து சாப்பிட்டது உண்மையா? அது அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மூலக் கேள்வியை ஒட்டி உப கேள்வி கேட்கவேண்டும். சாப்பிட்டது, போனது; வந்ததைப்பற்றியெல்லாம் கேள்வி நேரத்தில் கேட்கக்கூடாது. நான் இதை அனுமதிக்கவில்லை. நான் இதை எத்தனை தடவை சொல்லியிருக்கிறேன் ? கோதண்டராமன் அவர்கள் நீண்ட நாட்களாக சட்டசபை உறுப்பினராக இருப்பவர். கேள்வி நேரத்தில் கேள்வியை மட்டும் போட வேண்டும்.

திரு. வி. கே. கோதண்டராமன் : நான் இதை எதற்குக் குறிப்பிடுகிறேன். என்பதை பின்னுல் சொல்கிறேன். பணம் கட்டியிருந்தாலும், அவர்கள் மீது வழக்கு தொடரப்படாமல் இவர்கள் விடப்